අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2025

**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர தர)ப் பரீட்சை - 2025**

General Certificate of Education (Adv. Level ) Examination - 2025

# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
# பயிற்சி வினாத்தாள்
# Practice Paper

## යුරෝපා ඉතිහාසය History of Europe
## ஐரோப்பிய வரலாறு



**Question Paper – I** ප්‍රශ්න පත්‍රය (தமிழ் மொழி)

**අධ්‍යාපන"** උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන **අමාත්‍යාංශය**

**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**

கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

Ministry of Education,Higher Education and vocational Education

National Languages and Humanities Branch

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

25 B | S | I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி i)
History of Europe II (Part I)

**ஐரோப்பிய வரலாறு – கிரேக்க – உரோம காலம் முதல் கி.பி 1989 வரை**

*පැය තුනයි*
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிய வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக

சுட்டெண் :...................................

அறிவுறுத்தல்கள் -

- இவ்வினாத்தாள் பகுதி I இ பகுதி II ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது.
- பகுதி I இல் 1 – 40 வரையிலான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.

## பகுதி I

- இல 01 தொடக்கம் 10 வரை தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவற்றுல் ஒன்று மாத்திரம் ஏதோ ஒரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது அந்த பொருந்தாத பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) காபெந்தியன் (2) கொகேசஸ் (3) டோவர்
(4) அப்பினைன் (5) பிரணீஸ் (.........)

2. (1) அபொடைட் (2) ஜூபிட்டர் (3) மினர்வா
(4) நெப்டியூன் (5) மார்ஸ் (.........)

3. (1) பொம்பார்டிஸ் (2) பெட்ரீசியன்ஸ் (3) பிராங்ஸ்
(4) ஆற்கிலோ – சக்சன்மார் (5) விசிகொத்ஸ் (.........)

4. (1) டிராஜன் (2) அந்ரீயன் (3) நெர்பா
(4) பேபியன் மெக்ஸிமன் (5) திப்ரியஸ் (.........)

5. (1) ஹம்ரி கில்பட் (2) பிரொன்சிஸ் டிரெக் (3) வோல்டர் ரெலோ
(4) செபஸ்டியன் கபே (5) செம்பலேன் மாக்விடோ (.........)

6. (1) மாட்டின் லூதர் (2) ஜோன் கல்வின் (3) ஜோன் டெட்சல்
(4) உல்ரிச் சுவின்கலி (5) ஜோன் ஹஸ் (.........)

7. (1) வேர்ஜினியா (2) கலிபோர்னியா (3) டெலவியர்
(4) ஜோர்ஜியா (5) நிவ்ஹம்ஷயர் (.........)

8. (1) கெம்போ போமியா (2) ஏமியன்ஸ் ஒப்பந்தம (3) பிரஸ்பர்க்
(4) ஆலோ ஒப்பந்தம் (5) டில்சிட் ஒப்பந்தம் (.........)

9. (1) சுகர்னோ (2) நிகிதா குருசேவ் (3) மார்ஷல் டிட்டோ
(4) அப்துல் கமால் நசார் (5) விக்டோரியா ஒலேன்டோ (.........)

10. (1) வட அத்திலாந்திக் ஒப்பந்தம் (NATO)
(2) உணவு விவசாய தாபனம் (FAO)
(3) சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO)
(4) சர்வதேச நாணய நிதியம் (IMF)
(5) உலக சுகாதார தாபனம் (WHO) (.........)

- இல 11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடி சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, **அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) ஜெனிவா - றொன் நதி
(2) உரோம் - டைபர் நதி
(3) பேர்லின் - விஸ்டியூலா நதி
(4) லண்டன் - தேம்ஸ் நதி
(5) லிஸ்பன் - தாகுஸ் நதி (.........)

12. (1) ஈஸ்கிலஸ் - ஒரேஸ்டியா
(2) சொபொக்லிஸ் - ஓட்பஸ்ரெக்ஸ்
(3) யூரிபீட்ஸ் - ட்ரொஜன் விமன்
(4) தீயூசீட்ஸ் - பெலபோனிசியன் யுத்தம்
(5) ஹெசியட் - இலியட் ஒடிசி (.........)

13. (1) நிகலஸ் கொப்பனிகஸ் - அனைத்து கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன
(2) மைக்கல் சர்டேஸ் - வான் பொருட்கள் பற்றி ஆய்வு
(3) பெரசல்ஸ் - நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்
(4) வில்லியம் ஹார்வே - குருதிச் சுற்றோட்ட தொகுதி
(5) ஜொஹன்னஸ் கெப்லர் - கோள்கள் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன (.........)

14. (1) முதலாம் சால்ஸ் - ஒலிவர் குரோம் வெல்லால் கொல்லப்பட்ட இங்கிலாந்து மன்னன்
(2) இரண்டாம் ஜேம்ஸ் - மன்னனுக்கு சார்பாக (டோரி) மற்றும் எதிராக (விக்) இரு குழுக்கள் தோற்றம் பெற்றமை
(3) முதலாம் எட்வர்ட் - பாராளுமன்றத்தின் தந்தை
(4) எட்டாம் ஹென்றி - பெரன்களின் சபை நீக்கப்பட்டமை
(5) மூன்றாம் ஜோன் - மக்னா காட்டா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை (.........)

15. (1) ஜோசப் மசினி - தென் இத்ததாலியை கைப்பற்றியமை
(2) குசெப் கரிபால்டி - இராணுவ தலைமைத்துவத்தை வழங்கியமை
(3) பாப்பரசர் ஒன்பதாம் சியூஸ் - லிபரல் சீர்த்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியமை
(4) ஜியோபட் - பாப்பரசரின் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டாட்சி முறை ஒன்றை கட்டியெழுப்பியமை
(5) விக்டர் இமானுவல் - ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடிசூடிக்கொண்டமை

(.........)

- 16 -20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள்/திததிகளின் தொகுதிகள் X,Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுக்கள்/திகதிகள் X நிரலில் தரப்படடுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு பட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியான ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சுரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.

16.

| X | Y |
|---|---|
| (I) லியனாடோ டாவின்ஷி | A - இறுதி தீர்ப்பு |
| (II) மைக்கல் ஆஞ்சலோ | B - இறுதி இராப்போசனம் |
| (III) பொட்டி செல்லி | C – வீனசின் பிறப்பு |
| (IV) டிட்டியன் | D – பேரரசன் ஐந்தாம் சாள்ஸ் |
| (V) ரபாயல் சென்சியோ | E – எதன்ஸ் பாடசாலை |

(1) BECDE (2) BDCEA (3) BEDCA (4) BCADE (5) BACDE (.........)

17.

| X | Y |
|---|---|
| (I) ஸ்டுவட் | A - இத்தாலி |
| (II) ரொமனொன் | B- ரஸ்யா |
| (III) பிரகன்சா | C- போர்த்துக்கல் |
| (IV) வெலோய் | D- பிரான்ஸ் |
| (V) சவோய் | E- இங்கிலாந்து |

(1) ACEDB (2) DBCAE (3) CEABD (4) ECBAD (5) BDACE (.........)

18.

| X | Y |
|---|---|
| (I) புதிய உலகம் | A- ஆபிரிக்கா கண்ம் |
| (II) இருண்ட கண்டம் | B- துருக்கி |
| (III) ஐரோப்பாவின் நோயாளி | C- பிரித்தானியா |
| (IV) புவியியல் வெளிப்பாடு மாத்திரமே ஆகும் | D- இத்தாலி |
| (V) கடைக்காரர்களின் தேசம் | E- அமெரிக்க கண்டம் |

(1) EBDAC (2) ECDAB (3) EBDCA (4) EABDC (5) EACDB (.........)

19. X — Y

| X | Y |
|---|---|
| (I) ஜோன் கே | A- ரோலர் இயந்திரம் |
| (II) ஜேம்ஸ் ஹாக்ரீவ்ஸ் | B- ஓடும் நாடா |
| (III) ஹென்றி ஹோட் | C- ஸ்பினிங் ஜெனி |
| (IV) வில்லியம் சீமன்ஸ் | D- மின் அடுப்பு |
| (V) ஹமபிரி டேவி | E- பாதுகாப்பு விளக்கு |

(1) BACED (2) BDCAE (3) BCADE (4) BEACD (5) BADEC (.........)

20. X — Y

| X | Y |
|---|---|
| (I) வார்ச்சேல்ஸ் ஒப்பந்தம் | A- பல்கேரியா |
| (II) புனித பர்மேன் ஒப்பந்தம் | B- துருக்கி |
| (III) நியுலி ஒப்பந்தம் | C- ஹங்கேரி |
| (IV) டிரியனொன் ஒப்பந்தம் | D- ஜேர்மனி |
| (V) லௌசன் ஒப்பந்தம் | E- ஆஸ்திரியா |

(1) DEACB (2) DECAB (3) CEABD (4) BEACD (5) EDACB (.........)

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தரைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. ஆதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

21. கிறிஸ்தவ நாகரிகம்
   (1) கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் உரோம பேரரசின் அனைத்து பிரதேசங்களிலும் கிறிஸ்தவ சமயம் பரவியிருந்தது
   (2) கி.பி 313 மிலான் சாசனத்தின் படி கிறிஸ்தவம் அரச மதமாகியது
   (3) பேரரசர் தியோட்டசியஸ் உரோம பேரரசின் அரச மதமாக இதனை பிரகடணம் செய்தார்
   (4) பிராங் கோத்திரத்தை சேர்ந்த குளோவிஸ் மன்னன் கிறிஸ்தவ மதத்தை தழுவியதுடன் ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவ மதம் பரவியது.
   (5) கி.பி 590 இல் மகா கிறகரி எனும் பாப்பரசரால் பாப்பரசர் பதவி தோற்றுவிக்கப்பட்டது.

22. இஸ்லாமிய நாகரிகம்
   (1) முகமது நபி அவர்கள் கி.பி 570 இல் அரேபியாவின் மக்கா நகரில் பிறந்தார்
   (2) கி.பி 632 இல் முகமது நபி இறந்தபோது அவரது பிரதிநிதியாக அபுபக்கர் நியமிக்கப்பட்டார்
   (3) கி.பி 1435 இல் முஸ்லீம்கலால் கொன்ஸ்தாந்தின் நோபில் நகரம் கைப்பற்றப்பட்டது.
   (4) வெளிநாட்டு வர்த்தகமானது இஸ்லாமிய நாகரிகத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக மாறியது.
   (5) அவிசின்னா எனும் நூலை வைத்தியர்கள் கைநூலாக பயன்படுத்தியுள்ளனர்.(.........)

23. முப்பது ஆண்டு போர்
   (1) கி.பி 1618 இல் ஜேர்மனியை மையமாகக் கொண்டு இப்போர் ஆரம்பமானது
   (2) ஒக்ஸ்பேர்க் உடண்படிக்கையின் குறைபாடு காரணமாக இது ஏற்பட்டது.
   (3) பிரன்ஸ் போரில் வெற்றி பெற்றது.
   (4) வெஸ்ட் பாலியா சமாதான உடண்படிக்கையுடன் இச்சமய போர் நிறைவு பெற்றது.
   (5) புனித உரோம பேரரசன் வெறறிவாகை சூடினான் (.........)

24. நெப்போலியன் பொனபார்ட்டின் தேசிய சீர்த்திருத்தங்கள்
   (1) பிராந்திய நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டது.
   (2) பொதுவான சட்டத்தொகு ஒன்று உருவாக்கப்பட்டது.
   (3) பாப்பரசருடன் கொண்கோடாட் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
   (4) ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டது
   (5) பிரான்ஸ் மத்திய வங்கி நிறுவப்பட்டது. (.........)

25. சர்வதேச சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்
(1) பலம்வாய்ந்த நாடுகள் விலகியமை
(2) நிராயுத ஆணைகுழு நியமிக்கப்பட்டமை
(3) வல்லரசுகளிடையேயான உடண்பாடின்மை
(4) சங்கத்துக்கென சர்வதேச போர்ப்படை இல்லாமை
(5) உலக சமாதானத்தை முன்னெடுக்கம் நோக்கம் வீழ்ச்சியுற்றமை. (.........)

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A),(B),(C),(D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சுரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்து

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் .................................................. 1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 4 எனவும்

| அறிவுறுத்தல்களின் சுரக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும்(D) யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

26. பின்வருவோருள் புகழ்மிக்க உரோம எழுத்தாளர்கள் யாவர்
(A) செப்போ
(B) பின்டார்
(C) வர்ஜில்
(D) ஹொரேஸ் (.........)

27. கீழே தரப்பட்டுள்ளனவற்றுல் மானியமுறையின் பண்புகள் யாவை
(A) மானிட வாதம்
(B) நில அடிமை முறை
(C) இறையியல் வாதம்
(D) வர்த்தக வளர்ச்சி (.........)

28. கீழே தரப்பட்டுள்ளவர்களுள் பிரான்சிலிருந்த முக்கிய அமைச்சர்கள் யாவர்
(A) ரிச்சலியூ
(B) கொபெல்ஸ்
(C) மசாரின்
(D) வொன்வோல்க் (.........)

29. கீழே தரப்பட்டுள்ளளவற்றுள் ஐக்கிய நாடுகள் சபை எதிர்கொண்ட சவால்கள் எவை

(A) சுயஸ் கால்வாய் நெருக்கடி
(B) கியூபா ஏவுகணை பிரச்சினை
(C) ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தமை
(D) இத்தாலி அபசீனியாவை ஆக்கிரமித்தமை (.........)

30. பின்வருவோருள் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்படுவதில் முன்னோடியாக விளங்கியோர் யாவர்?

(A) வூட்ரோவில்சன்
(B) கிளமன்சோ
(C) லொயிட் ஜோர்ஜ்
(D) பிராங்லின் ரூஸ்வெல்ட் (.........)

- **31** தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

31. கைத்தொழில் புரட்சியின் போதான புதிய பிரதான கண்டுபிடிப்பாக அமைந்தது.
(1) இரும்பு எருக்கு உலை (2) ஓடும் நாடா (3) காற்றாளை
(4) புகையிரத என்ஜின் (5) மோட்டார் கார் (.........)

32. வலுவேறாக்கக் கோட்பாட்டினை முன்வைத்தவர் யார்?
(1) ஜீன் ஜக் ரூசோ (2) தோமஸ் ஹொப்ஸ் (3) ஜீன் போடின்
(4) மொன்டஸ் கியூ (5) வோல்டேயர் (.........)

33. பாசிசவாத இயக்கத்தை இத்தலியில் செயற்படுத்திய தலைவர் யார்?
(1) பெனிடோ முசோலினி (2) அடோல்ப் ஹிட்லர் (3) இரண்டாம் பேர்டினன்ட்
(4) சால்ஸ் டிக்கோல்ட் (5) மூன்றாம் நெப்போலியன் (.........)

34. ஐரோப்பிய சம்மேளன முறையில் நடாத்தப்பட்ட மாநாடு ஒன்று அல்லாதது.
(1) ஐலாசப்பேல் (2) வெரோனா (3) பரீஸ்
(4) லைபெக் (5) டிரபோ (.........)

35. நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடுகளால் ஏற்படக்கூடிய யுத்த அச்சுருத்தல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் சமவுடமை நாடுகள் இனைந்து உருவாக்கிக் கொண்ட அமைப்பு எது?
(1) மத்திய ஒப்பந்த அமைப்பு (2) தேசிய பாதுகாப்பு ஒப்பந்தம்
(3) மத்திய இரகசிய உளவு சேவை (4) யுனெஸ்கோ அமைப்பு (5) வோர்சோ அமைப்பு
(.........)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1,2,3,4 ,5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக

| | **முதல் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சுரியாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | **முதல் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| 36 | உரோம கார்த்தேஸ் மோதலானது ‘‘பியுனிக் யுத்தம்’’ என குறிப்பிடப்படுகின்றது. | உரோம இராஜதந்திரியான சிசரோ என்பவரால் ‘‘இளவரசன்’’ எனும் நூல் எழுதப்பட்டுள்ளது. | (.........) |
| 37 | புரட்டஸ்தாந்து ரெப்பரமாது இயக்கமானது ஐரோப்பாவின் அனைத்து துறைகளிலும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. | புரட்டஸ்தாந்து ரெப்பரமாது இயக்கமானது அது வரை காணப்பட்ட ஜேசு சபையை வீழ்ச்சியுற செய்ததோடு சமய, அரசியல் யுத்தங்களுக்கும் வழிகோலியது. | (.........) |
| 38 | கி.பி 1929 இல் ஹிட்லருக்கும் பாப்பரசருக்கும் இடையில் கையொப்பம் இடப்பட்ட ‘‘லைபெக்’’ ஒப்பந்தத்தின் மூலம் கத்தோலிக்கம் ஜேர்மனியின் அரச மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. | கி.பி 1981 இல் நிர்மாணிக்கப்பட்ட பர்லின் சுவரானது கி.பி 1989 இல் தகர்க்கப்பட்டது. | (.........) |
| 39 | பொஸ்னியாவின் தலைநகரான சரஜிவோ எனும் இடத்தில் இளவரசன் பிரான்சிஸ் பேர்டினன்ட் படுகொளை செய்யப்பட்டமை முதலாம் உலக போருக்கு உடனடிக காரணமாக அமைந்தது. | ஜப்பானால் பேர்ல் துறைமுகம் தாக்கப்பட்டமையானது ஐக்கிய அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் பங்குகொள்வதற்கு காரணமாக அமைந்தது. | (.........) |
| 40 | கி.பி 1975 இல் இந்தோனேசியாவின் பாங்டுங் நகரில் அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு நடைபெற்றது. | ரஸ்யா உக்ரைனுடன் இணைந்து ரஸ்ய சமஸ்டி கூட்டாட்சியை ஏற்படுத்திக்கொண்டது. | (.........) |

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2025
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர தர)ப் பரீட்சை - 2025
General Certificate of Education (Adv. Level) Examination - 2025

# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
## பயிற்சி வினாத்தாள்
## Practice Paper

# යුරෝපා ඉතිහාසය History of Europe
# ஐரோப்பிய வரலாறு



**Question Paper – II** ප්‍රශ්න පත්‍රය (தமிழ் மொழி)

**අධ්‍යාපන**" උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන **අමාත්‍යංශය**
**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

25B | S | II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

යුරෝපා ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி ii)
History of Europe II (Part I)

ஐரோப்பிய வரலாறு – கிரேக்க – உரோம காலம் முதல் கி.பி 1989 வரை

**அறிவுறுத்தல்கள்**
- ❖ நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்
- ❖ பகுதி II ஆனது ABC ஆகிய மூன்று பகுதிகளைக் கொணடது.
- ❖ பகுதி A யின் வினா கட்டாயமானது
- ❖ பகுதி BC ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடை தருக

(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இலங்கை புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) ஆட்ரியாட்டிக் கடல் | (ii) சேன் நதி | (iii) ஜிப்ரோட்டல் நீரிணை |
| (iv) சாடினியா | (v) லிவர்பூல் | (vi) லிஸ்பன் |
| (vii) கஸ்பியன் கடல் | (viii) டைபர் நதி | (ix) நோர்வே |
| (x) கிரீமியா | (xi) பெர்லின் | (xii) சுவிட்சர்லாந்து |

(சரியாக குறித்துப் பெயரிடுவதற்கு 1 புள்ளி வீதம் )

## பகுதி B

02. (i) கிரேக்க நகர அரசுகளில் காணக்கூடிய அடிப்படை பண்புகளை பரீசீலிக்குக (புள்ளிகள் 08)

(ii) பண்டைய கிரேக்க கலாசாரத்தின் தத்துவ சிந்தனைகள் மற்றும் சமய நம்பிக்கைகளை பரீசீலிக்குக (புள்ளிகள் 08)

**03. “மத்திய காலம் வீழ்ச்சியடைந்து நவீன காலம் தோற்றம் பெறுகையில் ஏற்பட்ட பிரதான அரசியல் மாற்றம் தேசிய அரசுகளின் தோற்றமாகும்”**

(i) தேசிய அரசுகள் தோற்றம் பெறுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) தேசிய அரசுகளில் காணக்கூடிய பிரதான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

(iii) தேசிய அரசுகள் தோற்றம் பெறுவதில் ஸ்பானியாவின் பேர்டினன்ட் இசபெல்லா தம்பதிகள் மற்றும் இங்கிலாந்தின் ஏழாம் ஹென்றி மன்னின் பங்களிப்பினை மதிப்பீடு செய்க. (புள்ளிகள் 10)

04. (i) பிரான்சிய புரட்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க (புள்ளிகள் 08)

(iii) பிரான்சிய புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை கருத்திற்கொண்டு அப்புரட்சியானது நவீன ஐரோப்பாவை கட்டியெழுப்புவதில் செல்வாக்கு செலுத்தியுள்ள விதத்தினை பரீசீலிக்குக. (புள்ளிகள் 08)

05. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
   (i) உரேமர்களிடமிருந்து கிடைத்த கொடைகள்
   (ii) மானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்
   (iii) 1688 மகோன்னத புரட்சி
   (iv) அமெரிக்க சுதந்திர போராட்டத்திற்கு ஏதுவான காரணிகள்

(புள்ளிகள் 08 x 2 = 16 )

## பகுதி C

06. (i) ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் செயற்பாட்டின் போது தலைமை வகித்த அரசு எது? (புள்ளிகள் 01)

   (ii) அவ்வரசினால் உருவாக்கப்பட்ட சுங்கவரிச் சங்கம் எது? (புள்ளிகள் 01)

   (iii) கி.பி 1848 வரை ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதில் இருந்து வந்த தடைகளை பரீசீலிக்குக (புள்ளிகள் 06)

   (iv) ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் செயற்பாட்டின் போது ஓட்டோவன் பிஸ்மார்க்கினால் ஆற்றப்பட்ட அலப்பரிய பணிகள் தொடர்பில் ஆராய்க (புள்ளிகள் 08)

07. (i) கி.பி 1917 போல்சவிக் புரட்சி ஏற்பட்டமைக்கு ஏதுவாக அமைந்த காரணிகளை பரீசீலிக்குக (புள்ளிகள் 08)

   (ii) அப்புரட்சியின் விளைவுகளை பகுப்பாய்வு செய்க (புள்ளிகள் 08)

08. இரண்டாம் உலக போர் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க (புள்ளிகள் 16)

09. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
   (i) வியன்னா மாநாடு
   (ii) கவுன்ட் கம்லோ கவுச்சர்
   (iii) முதலாம் உலக போரின் விளைவுகள்
   (iv) ஐக்கிய நாடுகள் சபை (புள்ளிகள் 08 x 2 = 16 )

***

ප්‍රශ්න අංකය
Question No 1

විභාග අංකය
Index no ......................................................................



අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - **2025**

**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2025**

**General Certificate of Education (Adv. Level ) Examination - 2025**

பாட இலக்கம் **25 B** பாடம் ஐரோப்பிய வரலாறு

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 5 | 22. | 3 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 5 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 5 | 15. | 1 | 25. | 2 | 35. | 5 |
| 06. | 3 | 16. | 5 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 3 | 37. | 5 |
| 08. | 4 | 18. | 4 | 28. | 2 | 38. | 4 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 1 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 3 | 30. | 5 | 40. | 3 |

ஒரு விளாவிற்கு 1 புள்ளி வீதம் 40 புள்ளிகள்